REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஜனவரி 8 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 89 இல. 07 | January 08, Friday, 2021 | 20பக்கங்கள் | 30/-



இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு சுமுக தீர்வு

டக்ளஸ்-ஜெய்சங்கர் நம்பிக்கை

விபரம் 02 பக்கத்தில்.......

### முதலாளிமார் சம்மேளனம் விட்டுக்கொடுக்காத நிலை;

# ரூ.1,000 சம்பள உயர்வு பேச்சு இணக்கப்பாடின்றி முடிவு

### அடுத்த சுற்றுக்கு திகதி குறிப்பிடாமலே கலைந்த குழு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தை எவ்வித இணக்கப்பாடுமின்றி முடிவடைந்துள்ளது. இப்பேச்சுவார்த்தையில் தோட்ட தொழிலாளர்களுக்கு ரூபா 1,000 சம்பள விவகாரம் ஆராயப்பட்டது. எனினும் முதலாளிமார் சம்மேளனம் விட்டுக்கொடுக்காத நிலையில் அடுத்த பேச்சுவார்த்தைக்கு திகதி குறிப்பிடாமலே முடிவுக்கு வந்துள்ளதாக இ.தொ.கா தெரிவித்துள்ளது. அரசாங்கத்தினால் வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட தோட்ட தொழிலாளர்களின் 1,000 ரூபா

06



இந்திய வெளியுறவ...
மற்றும் அமைச்சர்...




# இலங்கை தமிழருக்கு அர்த்தமுள்ள அதிகார பகிர்வுடன் நிரந்தர தீர்வு

### இந்தியா உறுதியாக உள்ளது என்கிறார் ஜெய்சங்கர்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு ஒன்றை இந்தியா எதிர்பார்த்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தமிழ்

06

# மலையக தமிழரது வாழ்வாதாரத்துக்கு இந்தியா தொடர்ந்தும் உதவியளிக்கும்

### இ.தொ.காவுடனான சந்திப்பில் ஜெய்சங்கர் உறுதி

**ஹற்றன் விசேட நிருபர்**

மலையக தமிழர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக இந்தியா தொடர்ந்தும் உதவியளிக்கும் என ...ன் வெளியுறவு அமைச்சர் ...ஸ்.ஜெய்சங்கர் இ.தொ.கா ...களுடனான சந் ...ிப்பிட்டுள்ளார்.

06



# பாடசாலை மாணவர்களுக்கு சுரக்ஷா காப்புறுதி தொடரும்

### நேற்று புதிய உடன்படிக்கை கைச்சாத்தானது



**லோரன்ஸ் செல்வநாயக்கம்**

பாடசாலை மாணவர்களுக்காக அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள சுரக்ஷா காப்புறுதித் திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுமென்றும் எதிர்வரும் 2021 டிசம்பர் முதலாம் திகதி வரை அது நீடிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர்

06

**சம்ஷ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



கொரோனா தொற்றால் மரணிப்பவர்களின் உடல்களை தகனம் செய்ய வேண்டுமென்றே விசேட நிபுணர்கள் குழுவின் பரிந்துரையாக உள்ளது.

அரசியல், மத மற்றும் தனிப்பட்ட நோக்கங்களுக்காக இந்தத் தீர்மானம் மாற்றப்படாதென சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை சுகாதார அமைச்சின் அறிவிப்பை வெளியிட்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

06

### சடலங்கள் தகனம் செய்வது தொடர்பான முடிவு;

# பாராளுமன்றத்தில் அனுமதி பெறாது வர்த்தமானி அறிவித்தல்

### ஒழுங்கு விதிகளுக்கு முரணானது - அதாவுல்லா எம்.பி

**சம்ஷ் பாஹிம் நிஷாந்தன் சுப்ரமணியன்**



கொரோனாவினால் இறப்பவர்களை தகனம் செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கு பாராளுமன்றத்தின் அனுமதி பெறப்படவில்லை. இது நாட்டின் சட்டத்திற்கும் பாராளுமன்ற ஒழுங்கு விதிகளுக்கு முரணானதென தேசிய காங்கிரஸ் தலைவரும் ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எல். எம். அதாவுல்லா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை முன் வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

06

# கிழக்கிலங்கை மக்களது பிரச்சினை; தீர்க்க இந்தியா ஒத்துழைக்கும்

### வியாழேந்திரனிடம் ஜெய்சங்கர் தெரிவிப்பு

கிழக்கு மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளை தீர்த்து வைக்க ஒத்துழைப்பு வழங்குவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் உறுதியளித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் நேற்று (07)

06



# தடுப்பூசி வழங்குவதில் முன்னுரிமை யாருக்கு?

### பாக்பர் சுதத் சமரவீர தெளிவுபடுத்தல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ள கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தலுக்கான தடுப்பூசி, உலக சுகாதார அமைப்பினால் அவசர நிலைமைகளில் உபயோகிப்பதற்கு பொருத்தமானதென பரிந்துரை

06

# வழக்குத் தாக்கல் செய்யாது எவரையும் நீண்டகாலம் தடுத்து வைத்திருக்க முடியாது

### அரசியல் கைதிகள் என எவரும் சிறைகளில் இல்லை என்கிறார் நீதியமைச்சர்

**சம்ஷ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

தண்டனைச் சட்டக் கோவையின் பிரகாரம் அரசியல் கைதிகளாக எவரும் சிறையில் அடைத்து வைக்கப்படவில்லை. அரசியல் கைதிகள் அல்லது வேறு அர்த்தம் வழங்கப்படுகின்ற கைதிகள் தொடர்பில் அரசாங்கம் தான் தீர்மானத்தை எடுக்க வேண்டும். நீதி அமைச்சால் அவர்களுக்கு தீர்வை வழங்க முடியாது. என்றாலும், வழக்குத் தாக்கல் செய்யாது எந்தவொரு கைதியையும் நீண்டகாலம் தடுத்துவைத்திருக்க முடியாதென நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.



பாராளுமன்றம் நேற்று வியாழக்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் முற்பகல் 10 மணிக்குக் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, மனுக்கள் சமர்ப்பணத்தை தொடர்ந்து வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனால், ஜெனிவா கூட்டத் தொடர் மார்ச் மாதம் வரும் சூழலில்

06

# கல்முனை பிரதேசத்தில் தொற்று எண்ணிக்கை 900 ஐ தாண்டியது

### அக்கரைப்பற்றில் 309 என்கிறார் Dr.சுகுணன்

**காரைதீவு குறூப் நிருபர்**



கல்முனை சுகாதாரப் பிராந்தியத்தில் தொற்றுக்களின் எண் ... பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதில் அக்கரைப்பற்று

### ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடனின்

# வெற்றியை உறுதிப்படுத்திய அமெரிக்க பாராளுமன்றம்



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன்



### பாடசாலைகளில் சுகாதார வழிமுறை;

# அதிபர், ஆசிரியர்களுடன் பெற்றோரே பொறுப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தனிமைப்படுத்தலுக்குட்பட்ட பிரதேசங்கள் தவிர்ந்த

